பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை 06.12.2024 கதிர் 029

## ஐநா பிரதிநிதியுடன் நேற்று கஜேந்திரகுமார் சந்திப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமாருக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ்சுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

ஐ.நாவதிவிடப்பிரதிநிதிமார்க்அன்ட்ரூ பிரென்ஞ்சின் அழைப்பின்பேரில் இடம்பெற்றஇச்சந்திப்பின்போது, நாட்டின் சமகாலநிலவரம், புதிய ஆளும்தரப்பின் செயற்பாடுகள், நாட்டை தொடர்ந்து முன்கொண்டுசெல்வதற்கு ஆளும்தரப்பு கொண்டிருக்கும் இயலுமை உள்ளிட்ட விடயங்கள் பற்றி வதிவிடப்பிரதிநிதி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கேட்டறிந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்புதிய ஆளும்தரப்பின் ஆட்சிக்காலத்தில் ஊழல் மோசடிகள் குறையும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகத் இந்தச் சந்திப்பில் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஆளும்ததரப்பு மூன்றில்இரண்டுபெரும்பான்மைப்பலம் கிடைக்கப்பெற்றிருக்கும் நிலையில், ஏற்கனவே நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு முரணாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்காமல் தொடர்வதையோ அல்லது பொருளாதார சுமையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதையோ நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்துவரும்ஒருவருடகாலத்துக்குள் இவ்விரண்டு முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டிய நிர்பந்தம் ஆளும்தரப்புக்கு இருக்கிறது சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று இப்போது தமிழ் அரசுக்கட்சிசார்பில் 8 உறுப்பினர்களும், ஜனநாயகதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சார்பில் ஒரு உறுப்பினரும், ☞ 8

## நாணய நிதிய உடன்படிக்கையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன

### சபை முதல்வர் நேற்றுத் அறிவிப்பு

சர்வதேசநாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் திருத்தப்பட்ட விடயங்கள் எதிர்வரும் ஆண்டு நிதி அறிக்கையில் (வரவு செசலவுத் திட்டம்) தெரியவரும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாக்குப் பதிவுக் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உரையாற்றுகையிவேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் சர்வதேசநாணய ☞ 8

## அடுத்த ஐந்து ஆண்டுகளில் 15 பில். டொலர் வருமானம்

### டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் ஈட்டத் திட்டம்

அடுத்த 5 வருட காலத்தில் டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் இலங்கை 15 பில்லியன் டொலர்களைச் சம்பாதிக்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயயக்க தெரிவித்தார்.

அரசியல் அதிகாரத்தினதும் டிஜிட்டல் தொழிநுட்ப நிபுணர்களினதும்எதிர்பார்ப்புகள்ஒன்றாகஇருக்கும்நிலையில் , நாட்டை டிஜிட்டல் மயமாக்கும் செயற்பாட்டிற்கு ☞ 8

## இது ரகசியம் அல்ல!

தேசியமக்கள்சக்தியின் ஆட்சியில் எதில் மாற்றம் வந்ததோ இல்லையோ பொலிஸ் திணைக்களத்தில் பெரும் மாற்றம் வந்திருக்கின்றது. வரலாற்றில் முதல் தடவையாக உயர் பொலிஸ் பதவிகளுக்குப் பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் பணிப்பாளராகவும், பொலிஸ் களப் படையணி தலைமையகத்தின் கட்டளைத் தளபதியாகவும், பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவு பணிப்பாளராகவும் மூன்று பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால. களப்படையணி தலைமையகத்தின் பணிப்பாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தர்ஷிகா குமாரி, பொலிஸ் விசேட புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் லங்கா ரஜினி, பொலிஸ்மருத்துவசேவைகள்பிரிவுப் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் மதரா ஆரியசேனா.

பொலிஸ் திணைக்களத்தை ஆட்டிப் படைப்பது மதுபோதை மற்றும் லஞ்சம் என்பது ஊறறிந்த இரகசியம். இந்த இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள். பொலிஸாரின் இரவுப் போதைக்கு லஞ்சம் ஒரு வடிகால். லஞ்சம் வாங்குவதற்கு போதை ஒரு தகுதிநிலை என்ற வகையில் இவை இரண்டும் பிரிக்ககக முடியாதவையாக இருக்கின்றன. பெண்கள் உயர் பதவிகளுக்கு ☞ 2

# போரில் மனித உரிமைகளை மீறிய அதிகாரிகள் மீது தடை விதியுங்கள்

## உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் வலியுறுத்து

**இலங்கையில்மனிதஉரிமைமீறல்களிலும் ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிராகத் தடைகளை விதியுங்கள் என்று வலியுறுத்தியுள்ளது இலங்கை தொடர்பான உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம்.**

**இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிகமோசமான மீறல் குற்றங்களில் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரீகளின் விவரங்கள் அடங்கிய 60க்கும் மேற்பட்ட ஆவணங்களை அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், ஐக்கியநாடுகள்பேரவைக்கும் அந்த அமைப்பு அனுப்பிவைத்திருக்கிறது.**

**ஜொஹனஸ்பேர்க்கை தளமாகக்கொண்டு சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் யஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கிவரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான உண்மைமற்றும்நீதிக்கானசெயற்திட்டமானது இலங்கையின் போரில் இடம்பெற்ற** ☞ 2

## டிசெ. 9 முதல் மீண்டும் மழை

எதிர்வரும் 9, 10, 11, 12 ஆகிய திகதிகளில் மீண்டும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை விளக்கினார்.

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் தெற்கு அந்தமான் தீவுகளுக்கு அருகே மீண்டும்ஒருகுழப்பநிலைஏற்பட்டுள்ளதால், அதன் தாக்கம் குறித்து அறிவிக்கும் வானிலை முன்னறிவிப்புகள் குறித்து மக்கள் கவனம் செலுத்துமாறு அவர் கோரியுள்ளார்.

'தென்மேற்கு வங்கக் கடலில் தெற்கு அந்தமான் தீவுகளுக்கு அருகே மீண்டும் ஒரு குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.


இந்த குழப்பநிலை, இது புயலா அல்லது காற்றழுத்த தாழ்வா என்பதை எம்மால் உடனடியாக சொல்ல முடியாது. ☞ 2

## கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை குறித்து பேசித் தீர்ப்போம்

### இப்போது அழைக்கிறார் ஹக்கீம்

கல்முனைவடக்குபிரதேசசெயலகம் தொடர்பில் பல விடயங்கள் இருப்பதால் அதனைக் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக்கொள்வோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற ☞ 2

## ஆட்கடத்தலை தடுத்து நிறுத்த கூட்டு நடவடிக்கைக்குத் திட்டம்

### தயாரிக்கப்படும் என்கிறார் பாதுகாப்பு அமைச்சு செயலர்

இலங்கையிலிருந்து ஆட்கடத்தலைத் தடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டுநடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்படும் என பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.ரவி செனவிரத்ன நேற்றுத் தெரிவித்தார். .

தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித கடத்தல் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி பத்தரமுல்ல வாட்டர்ஸ் ஏஜில் நடைபெற்றது. பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு ☞ 8

## மதுச்சாலை அரசியல்வாதிகளின் பெயர்களையும் வெளிப்படுத்துக

### புதிய ஜனநாயக முன்னணி எம்.பியும் வலியுறுத்து

அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் மதுச்சாலைஅனுமதிப்பத்ததிரங்களைப் பெற்றுக்கொடுக்க அரசியல்வாதிகளோ அமைச்சர்களோ அல்லது வேறுயாரேனுமோ பரிந்துரை ☞ 2

## மதுச்சாலை அரசியலாளர்கள்; ஆளும்தரப்பு விசாரிக்குமா?

### நாடாளுமன்றத்தில் சாணக்கியன் கேள்வி அமைதி காத்தார் சபை முதல்வர் பிமல்

அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிகளைவழங்கபரிந்ததுரை செய்த அரசியல்வாதிகள் யார் என்ற விவரம் குறித்து ஆளும் தரப்பு விசாரணை செய்யுமா என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ☞ 2

# ரணிலுக்கு ஒதுக்கிய நிதித் தொகை அளவிற்கு அநுரவிற்கும் ஒதுக்கீடு

## சபையில் சுட்டிக்காட்டினார் கபீர் ஹாசிம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு நிகரான தொகையே 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் இன்று சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கணக்கறிக்கை ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாக்குப் பதிவு கணக்கு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அவ்வாறு ஒதுக்கப்பட்ட தொகை 1.4 டிரில்லியன் ரூபாவாகும் எனச் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டு ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்டத்தின்படி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 1.4 டிரில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அதேபோன்று 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான 4 மாதங்களுக்கு இடைக்கால கணக்கறிக்கையில் 1.4 டிரில்லியன் ரூபா ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எண் ஒன்றுகூட வித்தியாசம் இல்லை. எங்கே குறைக்கப்பட்டுள்ளது. முறைமை மாற்றம் நடைபெறவில்லை. மாறாக ஆள்கள் மட்டுமே மாறியுள்ளனர். மாற்றம் நிகழ்ந்ததை எங்களுக்கு விளக்கவும். சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தடையின்றி நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

அது நல்லது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் கட்டமைப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும், அதன் உள்ளடக்கங்களில் சிலவற்றை மாற்றுவோம் என்று கூறியிருந்தோம் - என்றார்.

## இனி இது .....

வரத் தொடங்கியிருக்கும் இந்த மாற்றத்தின் மூலம் இனிவரும் காலங்களில் பொலிஸ் திணைக்களத்தில் லஞ்சம் மற்றும் மதுபோதைப் பிரச்சினைகள் குறையும் என்று எதிர்பார்க்கலாம். அதுவே தலைகீழ் மாற்றமாக பொலிஸ் பொறிமுறைக்குள் சிக்கி பெண் உயரதிகாரிகளும் மதுபோதைக்கும் லஞ்சத்திற்கும் அடிமைப்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்வது ஆளும் தரப்பினரின் கடமை.

.............................................

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று நிகழ்நிலை மூலம் நடந்தது. கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதில் கலந்துகொண்டனர். நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிதி அறிக்கையை ஆதரிப்பா இல்லையா என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காகத்தான் இந்தக் கூட்டம் கூட்டடப்படுவதாகச் செயலாளர் அறிவித்திருந்தார்.

கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகிவிட்டார் என்று அறிவித்திருந்த மாவை சேனாதிராசாவுக்கும் இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் தலைமைப் பதவியில் இருந்து விலகிவிட்டார் என்று அறிவித்த பின்னர் கட்சியின் கூட்டத்திற்கு அவர் அழைக்கப்படும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். கட்சியின் வேட்பாளர்களைத் தீர்மானிக்கும் கூட்டத்தில் தனது கருத்துக்களை தெரிவுக் குழு உறுப்பினர்கள் யாரும் மதிக்கவில்லை என்ற காரணத்தால் தலைமைப் பதவியிலிருந்து விலகுகிறார் என்று மாவை அறிவித்திருந்தார். அது தொடர்பான கடிதத்தை கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தவரான சிறீதரனுக்கு அனுப்பி அதன் பிரதியை கட்சியின் செயலாளருக்கும் அனுப்பி வைத்திருந்தார். அப்படியிருந்தும் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான கூட்டத்திற்கும் அவர் அழைக்கப்பட்டிருந்தார். கூட்டத்திற்குத் தலைமை தாங்கவும் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் தனக்கு அந்தப் பதவி தரப்படவேண்டும் என்றும் வாதிட்டிருந்தார். அங்கும் அவரது கருத்து எடுபடாமல் போனது. கட்சியின் செயலாளருக்கே அந்தப் பதவி வழங்கப்பட்டது. அதன் காரணத்தாலோ என்னவோ நேற்றைய கூட்டத்தில் மாவை பங்கேற்கவில்லை. மாவை இல்லாத நிலையில் கட்சிக்குத் தலைமை வகிக்க வேண்டியவரான மூத்த துணைத் தலைவர் சிவஞானமும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. முன்னாள் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் கட்சியின் பேச்சாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றவில்லை.

முக்கிய உறுப்பினர்கள் இன்றி நடந்த இந்தக் கூட்டத்தில் ஆளும்தரப்பின் இடைக்கால நிதி நிலை அறிக்கையை ஆதரிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. சுமந்திரன் இல்லாத இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவால், ஆளும்தரப்புக்கு முண்டுகொடுக்கும் தமிழ் அரசுக் கட்சி என்கிற விமர்சனம் எழுந்தால் (இவர்களின் தயவில் ஆளும் தரப்பு இல்லை என்பது வேறு விடயம் என்றபோதும், தேவையே இல்லாமல் ஆதரவு கொடுத்த தமிழ் அரசு என்று சொல்வார்களே) அதற்கு யார் இனிப் பொறுப்பேற்கப் போகிறார்கள். முன்னராவது சுமந்திரன், சம்பந்தன் தலைகளை உருட்டலாம். இனிச் சாணக்கியனின் தலையை உருட்டுவார்களோ!

ரெலோவின் தலைமைக் குழுவைக் கூட்டுவதற்கு மீண்டும் நாள் குறித்திருக்கிறார்கள். அதுபற்றிய தகவல்களை நாளை சொல்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## போரில் மனித ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நீதியை வலியுறுத்திவரும் ஓர் அமைப்பாகும். இலங்கை அரசமற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிராக நாடுகளுக்குள் நுழைவதற்கான தடைகள் உட்பட தடைகளை விதிக்கும்படி 60க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை அது சமர்ப்பித்திருக்கின்றது. உலகளாவிய சட்ட வரம்பெல்லையின் பிரகாரம் வழக்குப் பதிவுகளையும் கோரியிருக்கிறது.

டிசெம்பர் 10 மனித உரிமைகள் தினத்தையொட்டி இந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவை இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள், உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் தொடர்புடைய கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்டவையாக இருக்கின்றன.

உள்நாட்டுப் போரின்போதும், அதற்குப் பின்னருமான காலப்பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோதப் படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், பலவந்தமான கைதுகள் மற்றும் தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மனித குலத்துக்கு எதிரான மிகமோசமான மனித உரிமை மீறல்களும், நாட்டின் அரச கட்டமைப்புக்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பெரும் ஊழல்களும் இக்குற்றங்களில் அடங்குகின்றன.

அதுமாத்திரமன்றி இம்மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலான முறையற்ற தலையீடுகள், அதிகாரத்துஷ்பிரயோகங்கள் என்பனவும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக 1980களின் இறுதியில் இலங்கையில் பணியாற்றிய இந்திய அமைதிகாக்கும் படையினரால் நிகழ்த்தப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய இந்திய அமைதிகாக்கும் படையின் முன்னாள் அதிகாரிகளுக்கு எதிராகவும் தடைகளை விதிக்கும்படி மேற்குறிப்பிட்ட ஆவணங்களில் கோரப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, ”கடந்தகால மீறல்கள் தொடர்பில் இற்றைவரை பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத நிலையில், கடந்தகால மற்றும் சமகால குற்றங்களை ஆவணப்படுத்தி, அவற்றுக்கான சான்றுகளைப் பகுப்பாய்வு செய்து, உண்மையைக் கண்டறிவதற்கு ஏதுவான சகலவழிமுறைகளையும் உரியவாறு பயன்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரிபோது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக பிரிட்டனின் தற்போதைய புதிய ஆளும்தரப்பபு டிசெம்பர் 10 சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று தடைகளை விதிக்கும் என எதிர்பார்க்கின்றோம்” எனத் தெரிவித்துள்ளார்.

## கல்முனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடி இருக்கின்றனர். கலந்துரையாடலுக்கு பின்னர் நாடாளுமன்றத்திலும் அது தொடர்பான விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. குறிப்பாக கல்முனை வடக்குப் பிரதேச செயலக தொகுதி தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி தலையிடுவார் என்று வாக்குறுதி வழங்கியிருக்கிறார் என இந்தச் சபையில் தெரிவிக்கப்பட்டது.

கல்முனைப் பிரதேச செயலகம் தொடர்பில் அந்தப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. அதனால் இது தொடர்பில் நாங்களும் கலந்துரையாடுவோம். கலந்துரையாடல் ஊடாகவே இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்பது முடிவு செய்யலாம்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோருடன் கலந்துரையாடி இருக்கிறேன். எமது பிரச்சினை தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடி இருக்கிறேன். அதனால் இவ்வாறான பிரச்சினைகள் முரண்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் மூலமே தீர்வு காணப்படவேண்டும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விடயம் தொடர்பில் தற்போது வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலதிகமாக எல்லை நிர்ணயம் தொடர்பான பல குழுக்களும் இருக்கின்றன. இந்த விடயங்கள் தொடர்பான அனைத்தையும் கருத்திற்கொண்டு ஒரு தீர்மானத்துக்கு வருவோம் என நான் யோசனை முன்வைக்கிறேன் என்றார்.

## மதுச்சாலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருந்தால் அவர்களின் பெயர்களையும் வெளிப்படுத்தவேண்டும் என்று புதிய ஜனநாயக முன்னணி உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

நாடடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை முன்வைத்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆளும் தரப்பினால் 361 மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கிய பெயர்ப் பட்டியலை சபைக்கு சமர்ப்பித்திருந்தமைக்கு நன்றி.

நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற களுத்துறை மாவட்டத்துக்கு 6 புதிய மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதனால் இந்த அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டவர்கள் யார் என்பதுடன் அந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுக்க அரசியல்வாதிகளோ அமைச்சர்களோ அல்லது வேறுயாரேனுமோ பரிந்துரை செய்திருந்தால் அவர்களின் பெயர்களையும் வெளிப்படுத்தவேண்டும்.

அனைத்தையும் வெளிப்படுத்த முடியாவிட்டாலும் களுத்துறை மாவட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களுக்கு பரிந்துரை செய்தவர்களின் பெயர்களையாவது வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏனெனில் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் வழங்கிய பாவத்தில் பங்குகொள்ள அனைவரும் விருப்பவில்லை. அதனால் மிகவிரைவாக இந்த பெயர் பட்டியலை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதற்கு ஆளும் கட்சி பிரதமகொறடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளிக்கையில், பதுபானசாலை அனுமதிப்பதிரம் வழங்கியமை தொடர்பில் நிதி அமைச்சு விசாரணை மேற்கொண்டு வருகிறது.

விசாரணை முடிவடைந்த பின்னர் அது தொடர்பான விடயங்களை அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## நாடாளுமன்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பினார். ஆளும்தரப்பிடமிருந்து அதற்குப் பதில் கிடைக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆளும்ததரப்பால் அரசியல் இலஞ்சமாக மதுபானசாலைகளுக்கான அனுமதிகளைப்பெற்றவர்களின் விவரங்களை ஆளும்தரப்பு சபையில் சமர்ப்பித்தமை பாராட்டுக்குரியது.

அதேவேளை இந்த மதுபானசாலைகளின் உரிமையாளர்கள், இவற்றுக்கான அனுமதிகளுக்கு சிபார்சு செய்தவர்கள் தொடர்பில் அரசு விசாரணை நடத்துமா? அத்துடன் அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்ட இந்த மதுபான சாலைகளுக்கான அனுமதிகளை ஆளும்தரப்பு இரத்துச் செய்யுமா?

இந்த 361 மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் தொடர்பில் ஆளும்தரப்பு தெளிவான பதிலைச் சொல்லவேண்டும். பொதுமக்கள் எம்மிடம் இதுகுறித்து வினவுகிறார்கள். ஆகவே ஆளும்தரப்பின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று விளக்கமளிக்கவேண்டும் என்றார்.

சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக்கவிடம் அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார் எனினும் அரச தரப்பில் இருந்து எவரும் பதிலளிக்கவில்லை.

## டிசெ. 9 முதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் தற்போது வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது வங்காள விரிகுடா பகுதியில் இருந்து வடக்கு நோக்கி நகர்வதைக் குறிக்கிறது.

ஆனால் வடமேற்கே கனமானது. முன்னைய அமைப்புடன் ஒப்பிடும் போது இந்த அமைப்பு கிழக்குக் கடற்கரையிலிருந்து மேலும் விலகிச் செல்வதைக் காணலாம்.

9, 10, 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இதன் மறைமுக தாக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது, மறைமுக தாக்கம் காரணமாக வடக்கு, கிழக்கு, வடமத்திய, மற்றும் ஊவா மாகாணங்களில் சாதாரண மழை நிலை 09 ஆம் திகதி இரவின் பின்னர் அதிகரிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இது குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகுமா இல்லையா என்பதை எதிர்கால முன்னறிவிப்பில் மக்களுக்கு தெளிவாக தெரியப்படுத்துவோம்’ என்றார்.

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் ஓர் உறுப்பினரும் என தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 10 உறுப்பினர்களும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஒருமித்தநிலைப்பாட்டுடன் செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார். அதனை முன்னிறுத்தி தான் முன்னெடுத்துவரும் நகர்வுகள் பற்றியும் மார்க் அன்ட்ரூ பிரென்ஞ்சுக்கு அவர் விளக்கமளித்தார்.

நீண்ட காலமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் 10 பேர் தொடர்பில் பேசப்பட்டபோது, அவர்களது விடுதலை குறித்து தானும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுடன் பேசுவார் என்று ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ் தன்னிடம் தெரிவித்தார் என்றும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மதுவரித் திணைக்கள மூத்த அதிகாரிகள் ஜனாதிபதி அநுரகுமாரவைச் சந்தித்தனர்



மதுவரி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் ஒழுங்கான முறைமையொன்றைப் பின்பற்றுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பணிப்புரை விடுத்தார்.

மதுவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் நேற்று (வியாழக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அதிகாரிகள் தமது அதிகாரங்களை பயன்படுத்தி சட்டத்திற்கு முரணான விடயங்களை மேற்கொள்ளக் கூடாது எனவும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சட்டத்தை அமுல்படுத்துவது அவசியம் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி, உரிய நேரத்தில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

மதுவரி வசூலிப்பதில் உள்ள சிரமங்கள் மற்றும் அதில் இடம்பெறும் முறைகேடுகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அறவிடப்படவேண்டியவரியைவசூல்செய்தல், கருப்புப் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் வரி வசூலிக்க முடியாத நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை தடை செய்தல் போன்ற புதிய முறைகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், வரி அறவீடு செய்வதில் தற்போதுள்ள சட்டதிட்டங்களில் காணப்படும் குறைபாடு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், வரி அறவீட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் மதுவரி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு முறையிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

மதுவரித்திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்களிடையில் நல்லபிப்பிராயம் கிடையாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நாட்டின் பொருளாதாரத்துக்கு சாதகமான வகையில் அந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அதேவேளை, உற்பத்தி மற்றும் பொதியிடல் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளினால் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டதோடு, செயற்கைக் கள்ளு பாவனையினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் ரோஹன சேனாரத்ன, பிரதி மதுவரி ஆணையாளர் ஆர்.வி.எஸ். திஸ்ஸ குமார, உதவி மதுவரி ஆணையாளர் எம்.ஜே.டி. சில்வா, பிரதம நிதி அதிகாரி ஜி.ஏ. சாந்தனி, பிரதம கணக்காளர் டபிள்யூ.ஆர். பரணகம உள்ளிட்ட மதுவரித் திணைக்கள உயர் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் இணைந்துகொண்டனர்.



# ஐ.நா. சபைக்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

வங்காளதேசத்தில் ஹிந்து மற்றும் பிற சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்க ஐ.நா. தலையீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இலங்கை உலக ஹிந்து அமைப்புகளின் சம்மேளனம் ஏற்பாடு செய்த கவனவீர்ப்பு ஆர்பாட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னால் நடைபெற்றது.










# நாட்டின் சுற்றுச்சூழலை பாதுகாப்பது தொடர்பாக பாடசாலை மட்டங்களிலிருந்து கற்பிக்கவேண்டும்

## மன்னார் அரச அதிபர் அறிவுரை



பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் கழிகளை கண்ட கண்ட இடங்களில் வீசி எறியாமல், அவற்றை உரிய இடத்தில் போடுவதை பாடசாலை மட்டங்களிலிருந்து பழக்கப்படுத்த வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

யு என் டீ பி நிறுவனத்தால் மன்னாரில் முன்னெடுக்கப்படும் சுற்றுச்சூழல் தொடர்பான அபிவிருத்தி திட்ட மீளாய்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது .

அதில் கலந்துகொண்டு கருத்து தெரவித்தபோதே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

யுஎண்டிபி அமைப்பானது மன்னார் மாவட்டத்தில் ஆறு குழுக்களுக்கு நிதி வழங்கி திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

சூழல் நேயத்தை முன்னிருத்தி இந்த திட்டங்களை முன்னெடுத்துள்ளது. சூழல் மாசடையாது அதாவது உச்சக்கட்டத்துக்கு செல்லாதிருக்கும் நோக்கம் கொண்டு இத்திட்டம் நடைபெறுகிறது.

நாங்கள் முன்னெடுத்துச் செல்லுகின்ற எந்த அபிவிருத்தித் திட்டமும் சூழலோடு சேர்ந்த திட்டமாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் இவை நிலைத்திருக்கும்.

சூழலுக்கு பொருத்தமான திட்டங்களை பிரதேச செயலாளர்களுடன் பங்குதாரர்கள் இணைந்து செயற்படும்போதுதான் இவை சிறப்பாக அமையும்.

இங்கு முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்களை நோக்கும்போது மிகவும் பிரயோசனமானதாக இருக்கிறது. ஆகவே அனைத்து பங்குதாரர்களும் உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இங்கு பங்குதாரர்கள் கொண்டு நடைமுறைப்படுத்தும் இவை ஒரு சிறந்த திட்டங்களாக காணப்படுவதால் இதில் அக்கறைக் கொண்டுள்ள திணைக்களங்கள் இதில் தொடர்ந்து அக்கறை கொண்டு செயற்பட வேண்டும்.

இது முதலாவது மீளாய்வுக்கூட்டமாக அமைவதால் இனி அடுத்துவரும் கூட்டங்களில் மேலும் பரீட்சித்து முன்னெடுப்புக்களை தொடங்கலாம்.

பிளாஸ்டிக் பொருட்களை மற்றும் கழிவுகளை கண்ட கண்ட இடங்களில் வீசி எறியாமல் அவற்றை உரிய இடத்தில் போடுவதை பாடசாலை மட்டங்களில் இருந்து பழக்கப்படுத்த வேண்டும்.

இவ்வாறு குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கொருட்களை உரிய இடங்களில் போடும் பழக்கத்தை பொது மக்களும் கொண்டிருக்க வேண்டும்.

நகர சபை மற்றும் பிரதேச சபைகள் இவற்றை நடைமுறைப்படுத்துகிற போதும் இவை விஸ்தரிக்கப்பட வேண்டும்.

பிரதேச சபைகள் மற்றும் நகர சபை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாவரும் இதில் கலந்துகொள்வதால் மன்னார் மாவட்டத்தை சுற்றுச்சூழல், பச்சையம் கொண்ட மாவட்டமாக வைத்திருக்க முடியும். - என்றார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# போதைக்கு துணைநின்ற அரசியல்வாதிகளும் அம்பலப்படுத்தப்படவேண்டும்

இலங்கையைப் போதைக்குள் தள்ளும் விதத்தில் புதிய மதுச்சாலை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன என்பது இப்போது உறுதியாகி உள்ளது. அதன் விவரங்களை ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளது. மக்களை போதை மயக்கத்திற்குள் தள்ளித்தான் அரசின் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்கிற கீழ்த்தரமான எண்ணத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி செயற்பட்டிருக்கின்றது என்பது இதன் மூலம் அம்பலப்பட்டிருக்கின்றது.

361 புதிய மதுச்சாலை அனுமதிப் பத்திரங்கள் மிகக் குறுகிய காலத்தில் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் வடக்கு கிழக்கில் 54 மதுச் சாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. போரால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்புக்கள் இன்றி அல்லல்பட்டு வரும் வடக்கு கிழக்கு வாழ் இளைஞர்கள் ஏற்கனவே உயிராபத்தை விளைவிக்கும் போதைப் பொருள்களின் பயன்பாட்டால் சீரழிந்து வருகின்றார்கள். அப்படிப் போதைப் பொருளுக்கு அடிமையாகாதவர்களையும் சின்னாபின்னப்படுத்தும் வகையில் மதுச்சாலைகளைத் திறந்துவிடுவதை ஓர் ஆளும்தரப்பு செய்திருப்பது வெட்கக்கேடானது. கிளிநொச்சியில் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் வட்டுமே வாழுகின்றபோதும் அங்கு மட்டுமே புதிதாக 18 மதுச் சாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

2048இல் இலங்கையை வளர்ச்சியடைந்த நாடாக்குவேன் என்று முழக்கமிட்ட ரணில் விக்கிரமசிங்க, அதற்கான அடித்தளத்தை இட்டாரோ இல்லையோ போதையில் குதூகலித்துக் குப்புறவிழக்கூடிய நாட்டை உருவாக்குவதற்கான அடித்தளத்தை சிறப்பாகக் கட்டமைத்திருக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்த நடவடிக்கையில் அவருக்கு உடந்தையாக மேலும் பல அரசியல்வாதிகளும் இருக்கின்றார்கள் என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு.

அரசுத் தலைவர் தேர்தலில் தனக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்கிற நிபந்தனையுடனான அரசியல் லஞ்சமாகவே இந்த மதுச்சாலை அனுமதிகள் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டன என்று தற்போதைய ஆளும்தரப்பான தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்பாக எதிர்க் கட்சி வரிசையில் இருந்தபோது குற்றஞ்சாட்டியிருந்தது. அப்படி லஞ்சம் பெற்ற அரசியல்வாதிகளின் பெயர் விவரங்களைத் தானம் ஆட்சிக்கு வந்ததும் அம்பலப்படுத்துவோம் என்றும் கூறியிருந்தது. ஆனால் இதுவரையில் அது நடக்கவில்லை.

இப்போதும்கூட, நாடாளுமன்றத்தில் இது குறித்து தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி எழுப்பிய பின்னர்தான் அனுமதி வழங்கப்பட்ட மதுச்சாலைகளின் உரிமையாளர்களின் விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அனுமதிகளை வழங்கும்படி பரிந்துரைத்த அரசியல்வாதிகள் யார் என்கிற விவரங்கள் இன்னும் அம்பலப்படுத்தப்படவில்லை. அவற்றையும் ஆளும்தரப்பு வெளியிட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

நிதி அமைச்சு அது தொடர்பில் விசாரணை நடந்து வருகின்றது என்றும் அந்த விசாரணை முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் நாடாளுமன்றத்தில் பலதிலளிக்கப்பட்டிருக்கின்றது. தேவையற்றுக் காலந்தாழ்த்தாது, இந்த விடயத்தை உடனடியாக அவசர நிலையாகக் கருதி விசாரித்து முடிவுகளை மக்களுக்குத் தெரியப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். வருங்காலச் சந்ததியை போதைக்குள் முடக்கி வைக்கத் துணைநின்ற அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தவேண்டும்.




# மூன்றாம் உலகப் போர் வருமா?

**வீரையன்**

முதல் இரண்டு உலகப் போர்களால் ஏற்பட்ட அழிவுகள் இன்னும் மறக்கப்படவில்லை. போர் இல்லாத அமைதியான உலகத்தையே மக்கள் விரும்புகின்றனர். ஆனால் போர் ஆயுதங்களைத் தயாரித்து வைத்திருக்கும் வல்லரசு நாடுகள் போரை உருவாக்குகின்றன. அப்போதுதானே ஆயுதங்களை விற்பனை செய்ய முடியும் ?

முதல் உலகப் போர் 1914–ஆம் ஆண்டு ஜூலை 14 அன்று ஹங்கேரி– – ஆஸ்திரியா நாடுகள் செர்பியா மீது போர் அறிவித்தபோது தொடங்கியது. இது உலக வரலாற்றில் மிகப்பெரிய போர்களில் ஒன்றாகும். இந்த மிருகத்தனமான போரில் 7 மில்லியனுக்கும் அதிகமான பொதுமக்கள் மற்றும் 9 மில்லியன் படைவீரர்கள் உயிரிழந்தனர்.

இன்னும் சொன்னால் முன்பை விடத் தீவிரமாகப் நடந்துகொண்டிருக்கிறது. உக்ரைன் நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்த ரஷிய அதிபர் புதின், பெப்ரவரி 24, 2022 அன்று உக்ரைன் மீது போர் தொடுக்க தமது இராணுவத்திற்கு அதிரடியாக உத்தரவிட்டார். இதையடுத்து வான்வழித் தாக்குதல்கள், தரைவழித் தாக்குதல்கள் நடத்தியதையடுத்து உக்ரைன் எல்லைக்குள் ரஷிய இராணுவம் நுழைந்தது.

அடுத்தடுத்து உக்ரைன் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டே வந்த ரஷியப் படைகள் உக்ரைன் தலைநகர் கீவ்வை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. அந்த நிலையில்தான் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்கு உலக நாடுகளின் ஆயுத உதவிகளுடன் மாபெரும் ரஷியப் படைகளை எதிர்த்து உக்ரைன் போராடி



இரண்டாம் உலகப் போர் 1939 முதல் 1945 வரை நேச நாடுகளுக்கும், அச்சு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்றது. இதில் 30–க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 10 கோடிக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் நேரடியாகப் பங்கேற்றனர். மனித வரலாற்றில் இதுவரை அதிக உயிர் இழப்புகளை ஏற்படுத்திய போராக இரண்டாம் உலகப் போர் திகழ்கிறது. இனப்படுகொலை, பட்டினி, படுகொலைகள் மற்றும் நோய் காரணமாக கோடிக்கணக்கானோர் இறந்தனர்.

இரண்டாம் உலகப் போரானது, உலகின் அரசியல் சார்பு மற்றும் சமூக அமைப்பை மாற்றியது. பன்னாட்டு ஒத்துழைப்பை உருவாக்கவும், எதிர்காலத்தில் போர்களைத் தடுக்கவும் ஐக்கிய நாடுகள் அவை நிறுவப்பட்டது. அதன் பிறகு அமெரிக்க ஐக்கிய நாடும், சோவியத் ஒன்றியமும் எதிரெதிர் வல்லரசுகளாக வளர்ந்து விட்டன.

இப்போது இரண்டு போர்கள் உலகப் போரை நோக்கிப் போகின்றன. ரஷியா முதன் முறையாகக் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை உக்ரைன் மீது பயன்படுத்தியுள்ளது. இதை உக்ரைனின் முன்னாள் தளபதி, 'மூன்றாம் உலகப் போர் தொடங்கியது' என்று வர்ணித்துள்ளார். ஆயிரம் நாள்களைக் கடந்தும் முடிவடையாமல் போர் தொடர்ந்து நடந்து வருகிறது.

வருகிறது. இருப்பினும் ரஷியாவின் தொடர் தாக்குதலால் நிலைகுலைந்து வருகிறது.

குறிப்பாக ரஷியா–உக்ரைன் போரில் இதுவரை 1 இலட்சத்து 20 ஆயிரம் ராணுவ வீரர்களை ரஷியா இழந்து உள்ளது. இதேபோல உக்ரைன் சுமார் 80 ஆயிரம் படைவீரர்களைப் பறி கொடுத்துள்ளது. ஐநா அறிக்கையின்படி ரஷியா–உக்ரைன் போரில் 600–க்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்பட சுமார் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் 1,496 கல்வி நிறுவனங்கள், 662 சுகாதார நிலையங்கள் மற்றும் மின்சார நிலையங்களும் சேதமடைந்துள்ளன.

இலட்சக்கணக்கான மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். இந்த நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் டொனால்ட் டிரம்ப், "நான் போர்களைத் தொடுக்கப் போவதில்லை. நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்களை நிறுத்தப் போகிறேன்" என்று கூறியுள்ளார். இதனால் போர் நிறுத்தத்துக்கான நம்பிக்கை அறிகுறி தென்பட்டுள்ளது. ஆனால் அதன் பின்னரும் தீவிரமாகப் போர் நடவடிக்கைகள் நடைபெற்று வருவது உலக மக்களை கவலை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# மூன்றாம் உலகப் போர் வருமா?

4ம் பக்கத் தொடர்ச்சி..........

கொள்ளச் செய்கிறது.

அதாவது போர் நிறுத்தம் வரும் என்று உலக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, “உக்ரைன் இந்தப் போரில் அமெரிக்கா கொடுத்திருக்கும் நீண்ட தூரம் சென்று இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் ஏவுகணைகளை ரஷியாவுக்கு எதிராகப் பயன்படுத்தினால் நாங்கள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்” என்று ரஷிய அதிபர் புதின் அதிரடியாக அறிவித்துள்ளார். மேலும் ரஷியாவின் அணு ஆயுதக் கொள்கையிலும் புதிய சட்டத் திருத்தத்தை ரஷியா மேற்கொண்டது. இது உக்ரைன் மட்டும் அல்லாமல், உலக நாடுகளையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இந்த நிலையில் இப்போது கண்டம் விட்டுக் கண்டம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளை உக்ரைன் மீது ரஷியா ஏவியுள்ளது. 1000 நாள்கள் போர் வரலாற்றில் முதன் முறையாக ரஷியா இந்த வகை ஆயுதத்தை பயன்படுத்தியிருப்பதால் போர் இன்னும் தீவிரமாக வலுவடைந்துள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் முன்னாள் ராணுவத் தளபதியும், தற்போதைய பிரிட்டனுக்கான உக்ரைன் தூதுவருமான வலேரி ஜலுஷ்னி உக்ரைனில் நடந்த விருது வழங்கும் விழாவில் பேசியபோது, “2024 –ஆம் ஆண்டு மூன்றாம் உலகப் போர் தொடங்கி விட்டது. ரஷியாவுக்காக 10 ஆயிரம் வடகொரிய இராணுவத்தினர் உக்ரைனுக்கு எதிராகப்போரிட குர்லக்பகுதியில்நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அதேபோல ஈரானின் நவீன ட்ரோன்கள் மற்றும் அதிநவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன” என்றார்.

‘‘இவற்றையெல்லாம் உக்ரைன் அதிநவீன தொழில்நுட்பங்கள் மூலம் தாக்குப் பிடித்து வருகிறது. ஆனாலும் போரில் உக்ரைன் தனித்து நின்று வெல்லுமா என்று கூற முடியாது. உக்ரைனின் பொதுமக்களை கொன்று குவித்து வருகிறார்கள். உக்ரைன் நாட்டின் ஆதரவாளர்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் போர் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்.

உக்ரைனின் போர் நிறுத்தம் ஏற்படுவதுகூட இன்னும் சாத்தியம்தான், ஆனால் சில காரணங்களால் எங்கள் ஆதரவாளர்கள் இதைப் புரிந்து கொள்ள விரும்பவில்லை. உக்ரைனுக்கு ஏற்கெனவே பல எதிரிகள் இருக்கின்றனர் என்று அனைவருக்கும் தெரியும்” என்றும் கூறியுள்ளார்.

போர் தீவிரமடைந்து வரும் நிலையில் இரு தரப்பிலும் உயிரிழப்புகள் பெருமளவு ஏற்படக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கின்றனர் சர்வதேச அரசியல் நோக்கர்கள்.



அடுத்துஇஸ்ரேலுக்கும்,பாலஸ்தீனத்துக்கும் இடையே நடக்கும் போரைப் பார்க்கலாம். இந்த இருநாடுகளுக்கும்இடையே1948–ஆம்ஆண்டு இஸ்ரேல் என்ற புதிய நாடு அமைக்கப்பட்டதும் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. இனங்களுக்கு இடையேயான வன்முறை மனப்பான்மையால் மோதல்கள் பிறந்தன.

பாலஸ்தீனிய ஆயுதக் குழுவே ஹமாஸ், இது காசா பகுதியில் அரசியல் இயக்கமாகும்.அக்டோபர் 7, 2023 அன்று இஸ்ரேலைத் தாக்கி, சுமார் 1200 பேரைக் கொன்றது; 250க்கும் மேற்பட்ட பணயக் கைதிகளைப் பிடித்தது. இது காசாவில் ஒரு பெரிய இஸ்ரேலிய இராணுவத் தாக்குதலைத் தூண்டியது. இது பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனர்களைக் கொன்றது. ஹமாஸ் தொடர்ந்து இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகளை வீசியது. அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல் மற்றும் பல நாடுகள் ஹமாசை பயங்கரவாத அமைப்பாக தெரிவித்துள்ளன.

ஹமாஸ்என்பது1987–இல்முஸ்லிம்சகோதரத்துவத்தின் ஒரு கிளையாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பெயர் இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம் என்று பொருள்படும் பாலஸ்தீன நிலம் என்று கூறும் இஸ்ரேலின் இருப்பை எதிர்க்கிறது. அந்த இடத்திலும் ஆரம்பிக்கப்பட்ட மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் மற்றும் காசா முழுவதும் இஸ்லாம் அடிப்படையிலான ஓர் அரசை அது விரும்புகிறது.

ஒக்டோபர் – 7 தாக்குதலுக்கு முன், ஹமாசில் சுமார் 30,000 போராளிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒகஸ்ட் மாதம் இஸ்ரேல் தமது படைகள் அவர்களில் 17 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களைக் கொன்றுவிட்டதாகக் கூறியது. அது சரியான கணக்காக இருக்கமுடியாது. பாலஸ்தீனத் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்களை வன்முறையில் வெளியேற்றிய பின்னர் ஹமாஸ் மட்டுமே ஆட்சியாளராக இருந்து வருகிறது.

காசாவில் 41,600–க்கும் மேற்பட்ட பொதுமக்கள், அவர்களில் பெரும்பாலோர் பெண்களும், குழந்தைகளும் போரில் கொல்லப்பட்டனர் என்று ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2.3 மில்லியன் மக்கள் தொகையில் பெரும்பாலானோர் வீடுகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இரண்டும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக ஐநா குற்றம் சாட்டியுள்ளது. இரு தரப்பினரும் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று ஐநா மனித உரிமைகள் பேரவை கூறுகிறது. இதனை இரண்டு நாடுகளும் நிராகரித்துள்ளன. ஆனாலும் விடாமல் போர் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இவ்வாறு ரஷியா– – உக்ரைன் போரும், இஸ்ரேல் – பாலஸ்தீனப் போரும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அப்பாவி மக்கள் அநியாயமாக உயிரிழப்பதையும், பசி, பட்டினியாலும்,நோய்களாலும்சித்ரவதைஅனுபவிப்பதையும், அகதிகளாக அண்டை நாடுகளுக்கு இடம்பெயர்வதையும் மனிதநேயம் கொண்டோர் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

‘போர் என்பது காட்டுமிராண்டிகளின் கடைசிப் புகலிடம்’ என்று ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் நாகரிகச் சமுதாயத்தில் உலகில் எங்கேயாவது ஓர் இடத்தில் போர் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதனால் ஏதும் அறியாத அப்பாவி மக்கள் பலியாகின்றனர். மூன்றாம் உலகப் போர் ஒவ்வொருவர் தலைக்கு மேலேயும் தொங்கும் கத்தியாக எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கிறது.





# சைவராக வாழ்வோம்

இந்தப் பரந்து விரிந்த உலகிலே பலம் மிக்க பலவாறான மதங்கள் இருந்தாலும் ஆதி அந்தமில்லா மிகவும் தொன்மையான மதமாக எமது சைவ சமயமே திகழ்கின்றது. இவ்வுலகிலே பல மதங்களும் பலவாறான கருத்துக்களை முன் வைக்கின்றது எனினும் எமது சைவ சமயம் தருகின்ற அனைத்து விதமான கருத்துக்களும் எமது வாழ்வை வளப்படுத்துபவையாகவும் இவ்வுலகத்தையே அன்பினால் மாற்றியமைக்கின்ற சக்தியும் சைவ சமயத்திற்கே உண்டு.


அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன் குறுடு செவிடு பேடு நீங்கிப்பிறத்தல் அரிது என்றார் ஔவையார், அந்தவகையில் நாம் இந்தக்கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை எமது பூர்வ ஜென்ம புண்ணிய பாவத்தின்படி இப்பிறப்பை எடுத்திருக்கின்றோம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தமது வாழ்வில் ஏதாவது ஒரு சமயத்தினைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பது உலக நியதி அந்த வகையில் நாம் பல உண்மைகளையும் தத்துவ ஞான விளக்கங்களையும் தன்னுள் வைத்திருக்கும் சைவ சமயத்திலே பிறந்திருக்கின்றோம் இப்படிப்பட்ட சைவ சமயத்திலே பிறக்க நாம் கோடி புண்ணியம், தவம் செய்திருக்க வேண்டும்.

எமது சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவபெருமான் அவரே இந்த உலகம் முழுவதையும் படைத்துக்காத்து அருளுகின்றார். அத்துடன் சக்தியின்றி இயங்காது உலகு என்பர் சிவனுடன் இணைந்த சிவ சக்தியினாலேயேஇந்தஉலகம்இயங்குகின்றது. சைவர்களாகிய நாம்எமது சமயக் கடவுளர்களாக விநாயகர், முருகன், லட்சுமி, சரஸ்வதி, வைரவர், துர்க்கை, சிவன் போன்றவர்களை வணங்குகின்றோம். இக் கடவுளர்கள் எடுத்த பல்வேறு அவதாரங்களின் அடிப்படையில் நாம் கடவுளை பல்வேறு வகையிலும் வணங்குகின்றோம். சைவர்களாக பிறந்த நாம் எமது சைவ சமயம் சொல்லுகின்ற நியதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும்.

சைவர்களாகிய நாம் சைவ சமயம் உணர்த்துகின்ற விழுமியப்பண்புகளுக்கு இணங்க வாழ வேண்டும். எம்மை ஒரு நல்லொழுக்கமுள்ள பிரஜையாக வழிப்படுத்துவது சைவ விழுமியங்களே ஆகும். அந்த வகையில் எம் சைவ சமயம் உணர்த்துகின்ற முதலான பண்புகளில் அன்பு செலுத்துதல் என்பது மேலானதாக அமைந்துள்ளது. அன்பு என்ற ஒரு ஆயுதம் இந்த உலகையே வெல்லக்கூடியது. நாம் எமது குடும்ப உறவுகளையம் சகபாடிகளையும் தாண்டி மிருகங்கள் பறவைகள், மரம், செடி, கொடி போன்ற இவ்வுலகிலுள்ள அனைத்திலும் அன்பு செலுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். இறைவனுக்கு நாம் செய்கின்ற உயரிய தவமாக அன்பு செலுத்துவதையே வலியுறுத்துகின்றனர் அடுத்து தர்மம் செய்தல் இல்லாதவர்களுக்கு இல்லை என்று சொல்லாது எம்மால் முடிந்த உதவிகளைச் செய்தல் வேண்டும். அதனாலே தான் ஔவையார் அறம் செய்ய விரும்பு , ஈதல் அறம் எனக்கூறுகின்றார். அந்தவகையில் நாம் தான தர்மங்களைச் செய்தல் வேண்டும் எனவும் எமது சமயம் வலியுறுத்துகின்றது. தானத்தில் சிறந்த தானம் அன்ன தானம் என்பர் அதனால் பசியால் வருந்துவோருக்கு பசி போக்குபவர் மிகவும் பெருமைக்குரியவர் ஆகின்றார். அதனால் தான் திருவள்ளுவர்

':ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்
ஈயேன் எனல் அதனினும் இழிந்தன்று '

எனக் கூறுகின்றார். அதாவது பசியால் வருந்துவோருக்கு உணவு கொடுத்து உதவுபவர்களின் ஆற்றலை தவம் செய்பவரின் ஆற்றலோடு ஒப்பிடும் போது அத்தவம் ஆனது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இவற்றை போல பல விழுமியப்பண்புகளையும் எமது சைவ சமயம் குறிப்பாக ஒப்புரவு ஐம்பொறியடக்கம், நன்றி மறவாமை, சகிப்புத் தன்மை போன்ற பல விடயங்களைக் கூறகின்றது. அதனைப் பின்பற்றி வாழ்வதும் சைவர்களாகிய எமது கடமையாகும்.





எமக்கு சைவர்கள் என்னும் அடையாளத்ததை தருபவை சைவ சாதனங்களாகும் இவை சைவ சமயத்திற்கு அடையாளமாக விளங்குகின்றன. எனவே அவை சிவ சின்னங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. அவ்வாறான சிவ சின்னங்கள் வீபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம் என்பவையாகும். இவற்றுள் புறசைவசாதனங்களாகவீபூதியும் உருத்திராக்கமும் ஆகும். எனவே சைவ சமயத்தவராகிய ஒவ்வொருவரும் வீபூதி மற்றும் உருத்திராக்கம் அணிவது தலையாய கடமையாகும். அத்துடன் அகச் சைவ சாதனமாக பஞ்சாட்சர மந்திரங்களையும் உச்சரித்து இறைவனை நினைத்து தவம் செய்ய வேண்டும்.

சைவ சமயம் ஆனது எமக்க பல்வேறு நன்மைகளைப் போதிக்கின்றது. எமது முன்னோர்கள் சைவ சமயம் கூறுகின்ற கருத்துக்களை நெறி தவறாது பின்பற்றி வந்தனர் ஆனால் தற்கால சந்ததியினர் சைவர்களாக இருந்தும் சைவம் கூறுகின்ற நடைமுறைகளைப் பின்பற்றாமல் வாழ்கின்றனர். அதற்கு பிரதான காரணம் வேற்று மத கலாசாரங்கள் எமது மதத்திற்குள் புகுத்தப்பட்டமையே காரணம் ஆகும். குறிப்பாக கோயில்களுக்கு அணிந்து செல்லும் ஆடைகள். தலை முடி கட்டும் விதம் போன்ற பல நடவடிக்கைகள் எமது சமயத்திற்கு முரணானதாகவே அமைந்துள்ளன. இக்காலச் சமூகம் தன்னுடைய சுயநலத்திற்காக எமது சமயக் கடமைகளை மறந்து ஓடிக்கொண்டிருக்கின்றனர். எமது சமயமான சைவ சமயம் அழிந்து போக நேர்ந்த காலங்களில் தமது உயிரை விட சைவ சமயத்தை; மேலாக மதித்து அரும் பாடுபட்டு எமது சமயத்தை மீட்டனர் அந்த வகையில் உலகமே பார்த்து வியந்து நிற்கும் எமது சைவ சமயத்தின் பல அற்புத அதிசயங்களை உணர்ந்த அவை கூறுகின்ற அனைத்து நற்கருத்துக்களையம் பின்பற்றி நல்லொழுக்கமுள்ள சைவர்களாக வாழ்ந்து எமது சைவ சமயத்தினைப் பெருமைப்படுத்துவோம்.

**யாழிசை**



காலைக்கதிர் Kalaikkathir

# தம்பலகாமம் வயல்களில் மீண்டும் நெல் விதைப்பு

## வெள்ளத்தால் அழிந்ததால் இந்த நிலை

(ஹலால்தீன்)

தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட வர்ணமேடு, முள்ளியடி, சிப்பி திடல் முதலான பகுதிகளில் விதைக்கப்பட்ட பெரும்போக வேளாண்மை செய்கை அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக அழிவடைந்துவிட்டது விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்துப்பிரதேசத்தில் சுமார் 1350 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் வேளாண்மை பரீட்சைக்கு மேற்கொள்ளப்பட்டன.

எனினும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பெரும்பான்மையான வயல்கள் அழிந்து விட்டன எனவும் அழிந்துவிட்ட பகுதிகளுக்கான இரண்டாவது தடவையாக விதைப்பு செய்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இரண்டாவது முறையாகவும் மீள நெல் விதைப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு விட்டதாக கூறுகின்றனர்.

இதனால் தமக்குத் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளப்பெருக்கால் வேளாண்மையாவும் அழிந்ததால் மீண்டும் நாங்கள் விதைத்துள்ளோம் 25, 30 நாள்களாக நாங்கள் இவ்விடத்தில் இருக்கின்றோம் கஷ்டப்பட்டாக்கள் எங்களுக்கு அரசாங்கம் தான் உதவி செய்யும்.

கந்தளாய் இருந்து வருகின்ற தண்ணீரும் மழை நீரினாலும் நாங்கள் பாதிக்கப்பட்டு விட்டோம் இரண்டாம் தடவையாகவும் நாங்கள் விதைப்பு நடவடிக்கைகள் செய்துள்ளோம்.

இதுதான் எங்களுடைய பரம்பரை தொழில் அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எங்களுக்கு வேறு தொழில் இல்லை.

முதல் தடவை வேளாண் செய்து அழிந்துவிட்டது இரண்டாம் தடவை செய்கின்றோம். இரண்டாவது தடவையும் மழை வரும் என்று சொல்கின்றார்கள் என்ன நடக்கும் என்று எங்களுக்கு தெரியவில்லை என அவர் தெரிவித்தார்.





# வெள்ளம் பாதித்த பெண்களுக்கு அவசர உதவிப் பொருள் வழங்கல்

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட பெண்களுக்கான அவசர உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதிப் பங்காளிப்பில் இவை இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

13 வயது தொடக்கம் 19 வயத்திற்குட்பட்ட பெண்களுக்கும், 20 வயது தொடக்கம் 45 வயத்திற்குட்பட்ட பெண்களுக்குமென இரு பிரிவுகளாக பெண்களுக்கான விசேட பொதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அதனடிப்படையில் கடந்த திங்கட்கிழமை தர்மபுரத்தில் 30, கண்டாவளையில் 50 பேருக்கும் வழங்கிவைக்கப்பட்டன தொடர்ந்து செவ்வாய்க்கிழமை இரத்தினபுரத்தத்தில் 50 பேருக்கும், ஸ்கந்தபுரத்தில் 30 பேருக்கும், பல்லவராயன்கட்டில் 35 பேருக்கும், நச்சிக்குடாவில் 30 பேருக்கும் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் புதன்கிழமை பளையில் 37 பேருக்கும், தம்பகாமத்தில் 30 பேருக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஆகியன இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்றன.

யுஎன்எவ்பிஏ. கிளிநொச்சி மாவட்டத்தில் வன்முறைகளுக்கு ஆளான பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், கர்ப்பிணிப் பெண்களின் சுகாதார நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகிய செயற்றிட்டங்களில் அதிக கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின்வடக்கு மாகாண இணைப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட செயலக உளவளதுணையாளர், கிராம சேவகர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். 113








# சுழிபுரத்தில் கோர விபத்து மாணவன் ஒருவன் இறப்பு

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் வியாழக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளதோடு, மற்றுமொரு மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த 17 வயது மாணவனே உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த 15 வயதுடைய மற்றுமொரு மாணவன் படுகாயமடைந்துள்ளார்.

சுழிபுரத்திலிருந்து மூளாய் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் சுழிபுரம் சந்தியில் அதன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தில் மோதியுள்ளது.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சம்பவ இடத்துக்கு சென்று மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலிருந்து எடுத்துச் சென்றுள்ளார்.

மாணவர்கள் இருவரும் இரத்த வெள்ளத்தில் வீதியில் கிடந்த நிலையில், வீதியால் பயணித்தவர்கள் அம்புலன்ஸுக்கும் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், மாணவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்தடைந்தனர்.

சுமார் 20 நிமிடங்களுக்கு மேலாகியும் அம்புலன்ஸ் மாணவர்களை கொண்டுசெல்ல வராததோடு, வீதியால் பயணித்த வேறு வாகனங்களும் மாணவர்களை ஏற்ற பின்வாங்கியுள்ளன.

நீண்ட நேர பரிதவிப்பின் பின்னர், அங்கிருந்தவர்கள் பட்டா ரக வாகனமொன்றில் மாணவர்களை ஏற்றி, மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

வைத்தியசாலையில் மாணவர்களை பரிசோதித்த வைத்தியர்கள், ஒரு மாணவன் முன்னதாக உயிரிழந்துவிட்டார் என அறிக்கையில் குறிப்பிட்டனர்.

இதேவேளை, படுகாயமடைந்த மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பட்டா வாகனத்தில் மாணவர்கள் கொண்டுசெல்லப்பட்ட பின்னர், அம்புலன்ஸ் சம்பவ இடத்துக்கு வந்தடைந்தது.

இந்நிலையில், மகன் விபத்துக்குள்ளாகியிருப்பதை கண்டு, விபத்து இடம்பெற்ற இடத்தில் மயங்கி விழுந்த தாயொருவரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல கேட்கப்பட்டபோதும், அவரை ஏற்றிச்செல்ல அம்புலன்ஸில் வந்தவர்கள் மறுத்துவிட்டு, திரும்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் வட்டுக்கோட்டை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# 14 இராமேஸ்வரம் மீனவர்கள் தலைமன்னார் கடலில் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 14 இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இலங்கை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் மீன்பிடித்துறைமுகத்திலிருந்து புதன்கிழமை காலை மீன் பிடிக்க வந்த மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக்கொண்டிருந்தபோதே தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 14 மீனவர்களும் இரண்டு இந்திய இழுவைப் படகுகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களும் இழுவைப் படகுகளும் தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து, அந்த மீனவர்களிடம் தலைமன்னார் கடற்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்விசாரணைகளின் பின்னர், மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதுவரை நாட்டின் கடற்பரப்புக்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் 68 இந்திய மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, 529 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## அடுத்த ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து தொழில் வல்லுநர்களினதும் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் பொருளாதார அலுவல்கள் அமைச்சராக கடமைகளை நேற்று பிற்பகல் பொறுப்பேற்றபின்னர் அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

டிஜிட்டல் மயமாக்கல் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளின் வினைத்திறனை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டுவர முடியும். வறுமையை ஒழித்தல், சமூக மனப்பாங்குகளை மாற்றுதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன ஆளும்தரப்பின் பிரதான இலக்குகளாகும்.

கட்டடங்களை நிர்மாணிப்பதனால் மாத்திரம் ஒரு நாடு அபிவிருத்தியடையாது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணத்துறை அமைச்சொன்று இருந்தது. ஆனால் தற்போது ஒவ்வொரு அமைச்சும் நிர்மாணப் பணிகளையே மேற்கொண்டு வருகின்றன.

கடந்த வருடம் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக வேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது கல்விமறுசீரமைப்பு தொடர்பில் எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. கட்டட நிர்மாணங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்கள் மாத்திரமே இடம்பெற்றன.

தொழில் அமைச்சுக்கு இரண்டு பெரும் கட்டடங்கள் உள்ள போதிலும் இன்னும் மக்களின் வரிசையில் குறைவில்லை. அதற்கான தீர்வுகளை வழங்க டிஜிட்டல் மயமாக்கல் அவசியமானது.

டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் 15 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது - என்றார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் டிஜிட்டல் பணியாளர்களை இரண்டு இலட்சமாக அதிகரிப்பது, முழு நாட்டையும் டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பான செயல் திட்டத்தை எதிர்வரும் 5 வருடங்களில் செயல்படுத்துவது நேற்றுக் கவனம் செலுத்தப்பட்டது.

டிஜிட்டல் பொருளாதார பிரதியமைச்சராக பொறியியலாளர் எரங்க வீரரத்னவும் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீ தனபால, ஜனாதிபதியின் டிஜிட்டல் விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர், ஐசிரிஏ (ஞூளீவீபு) தலைவருமான ஹான்ஸ் விஜேசூரிய உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நாணய நிதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியத்தின் கட்டமைப்பிற்குள் நாங்கள் செயல்படவேண்டியிருக்கும் என்று நாங்கள் கூறினோம். ஆனாலும் உடன்படிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என நாம் கூறினோம். ஆம், அது திருத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அந்தத் திருத்தங்களின் விடயங்களை வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நாட்டுமக்கள் அறிந்துகொள்ளமுடியும். நாடாளுமன்றத்திற்கே நிதி அதிகாரம் உள்ளது.

அனுபவமிக்கரணில்விக்கிரமசிங்கஎல்லா இடங்களிலும் வற்வரி குறைக்கப்படவில்லை, நாங்கள் பொய் சொன்னோம் என்றார். வரி குறைக்கப்பட வேண்டும். வரி குறைக்கப்படவுள்ளது. யாரால் குறைக்க முடியும்? நாடாளுமன்றத்தின் மூலம்தான் அது முடியும்.

தற்போது முன்வைக்கப்படுவது இது ஒரு நிதி சட்டமூலம். எமது முதலாவது வரவு செலலவுத்திட்டத்தில் மக்களின் எதிர்பார்ப்புக்கள் செயற்படுத்தப்படும். நாடாளுமன்றத்தின் மூலம் மட்டுமே வரிகளைக் குறைக்க முடியும் - என்றார்.

## ஆட்கடத்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, தொழிலாளர் திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு, திணைக்களம் சமூகசேவைகள், தொழிலாளர் அமைச்சகம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, சுவிஸ் தூதரகத்தின் பிரதிநிதிகள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**

kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக தேசிய மக்கள் சக்தி ஆட்சி இருக்கும்!

## அருட்தந்தை சக்திவேல் ஆருடம்



தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் என்பது வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட தொடங்கியுள்ளன என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே வ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் என்பது வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. அரசியல் களச் சூழ்நிலை அறிந்து எமக்கிடையிலான பலமான அரசியல் கூட்டு கட்டமைப்பு உருவாக்கினால் மட்டுமே நாம் எதிர்நோக்கும் அரசியல் போரை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பேரவையால் முன்வைக்கப்பட்ட அரசியல் பிரேரணைகளை மையப்படுத்தி பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான ஆயத்த பேச்சை தமிழ் தேசிய முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் தமிழரசு கட்சி தலைவர் சிறீதரனுக்கும் இடையில் ஆரம்பித்திருக்கும் பேச்சை வரவேற்பதோடு இக்கூட்டு செயற்பாடு நாடாளுமன்றத்துக்குள்ளும் அதற்கு வெளியிலும் கொள்கை ரீதியில் பலமடைய வேண்டும். விரிவடைய வேண்டும். புலம்பெயர்ந்தோர் அமைப்புக்களும் தடம் மாறாது களத்திலும் புலத்திலும் அரசியல் கடப்பாட்டினை நிறைவேற்றதுணை நிற்க வேண்டும்.

அன்று பொங்கு தமிழாக அதனைத் தொடர்ந்து தமிழ்மக்கள்பேரவையாகதிரண்டது போன்றுமீண்டும் மக்கள் அரசியலும் அதற்கான கூட்டு செயற்பாடும் கொள்கை ரீதியில் விட்டுக்கொடுப்புக்கள் இன்றி பலமடைய அனைவரும் அரசியல் முதிர்ச்சியோடு தம் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தமிழர் தாயக விடுதலை போராட்டத்தை தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் பயணத்தை சிதைத்த சக்திகளுக்கு மத்தியில் நேற்று முளைத்த சில அரசியல் காளான்களுக்கும் எம் தாயக அரசிற்கான கூட்டு தடையாக இருக்கலாம். நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் கெட்ட தேசமாக அமையட்டும். அது எல்லாவற்றையும் பாடமாக கொண்டு அரசியல் பயணத்தில் விரைவாக பலமடைய வேண்டும் என்பதே தமிழ் தேச மக்களின் அரசியல் விருப்பம்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்றில் 3ஃ2 அதிகமான பெரும்பான்மை கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அடுத்து வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும், மாகாண சபை தேர்தலிலும் முழு நாட்டையும் தமதாக்கிய பின்னர் யாப்பு சீர்திருத்தம் எனும் போர்வையில் தமிழர்களுக்கு எதிரான அரசியல் போரை தீவிரப்படுத்தும்.

சூடு கண்டவர்களாக நாம் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் கட்சிகளாகவும் சமூக அமைப்புகளாகவும் தனித்தனியாகவும் கூட்டாகவும் எம் தாயக அரசியலை மையப்படுத்தி கூட்டு செயற்பாட்டு சூழலை அவசரமாக தமிழர் தாயக பிரதேசங்களில் உயிர்ப்பித்தல் அவசியம்.

உயிர்ப்பிக்கப்படும் கூட்டு தமிழ் மக்கள் பேரவை முன் வைத்த அரசியல் முன்மொழிவுகளோடு ஆரம்பிக்கலாம். பல்வேறு விதமான கருத்து மோதல்கள், தலைமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்,அமைப்பு ரீதியில் நிர்வாக சிக்கல்களும் வரலாம். கொள்கை அரசியலில் விட்டுக்கொடுப்புகள் இன்றி பலமான தேச அரசியலை கருத்தினை முதன்மைபடுத்தி சகிப்புத்தன்மையுடன் பயணத்தை தொடருவது சாலச் சிறந்தது.

மக்கள் விடுதலை முன்னணி செயலாளர் ரில்வின் சில்வா அவர்கள் அண்மைய ஊடக பேட்டியில் மக்கள் விடுதலை முன்னணியும் தேசிய மக்கள் சக்தியும் ஒன்று என்று கூறியதில் இருந்து மக்கள் முன்னணியில் அரசியல் முகம் வெளிப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாதவர்கள் தேசிய மக்கள் சக்தி என முகம் கொண்டு வெளியில் வந்துள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளருடைய கூற்றுக்கு தேசிய மக்கள் சக்தி இதுவரைக்கும் எந்த பதிலையும் அளிக்கவில்லை. எனவே தேசிய மக்கள் சக்தி என்பது மக்கள் விடுதலை முன்னணியே. எனவே தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அதன் கோரமுகம் அவ்வாறே உள்ளது என்பதிலே மாற்று கருத்து கிடையாது.

தமிழர் தேசத்தில் அரசு படைகளை பலப்படுத்தியதும், படைத்தளங்களை விரிவுபடுத்தியதும், அரசகாணி மற்றும் பொதுமக்கள் காணிகளையும் கையகப்படுத்தியதும், மகாவலி அதிகாரி சபையை முன்னோக்கி நகர்த்துவதும் சிங்கள பௌத்த திணைக்களங்களை சுதந்திரமாக செயல்பட இடமளித்ததும் தெற்கின் சிங்கள பௌத்த பேரின வாத அரசியலின் தேவை கருதியே.

தற்போதும் அதே அரசியல் கருத்தியல் கொண்டவர்கள் பாதைகள் திறந்து விடுகின்றனர், படைத்தளங்களை கூடுகின்றனர் (படைகளை குறைக்கவில்லை) மாவீரர் தினத்தை நினைவு கூற அனுமதிக்கின்றனர் கைதும் செய்கின்றனர். இது போன்ற கவர்ச்சி செயல்கள் மேலும் தொடரலாம்.

இதுவும் அவர்களின் அரசியல் தேவை கருதியே அன்றி தமிழர்களின் தேவை கருதி அல்ல. இதனை தமிழ் தேச மக்களும் நன்கு உணர்வார்கள். இந்நிலையில் மாற்றம் அடையலாம். எதிர்த்தரப்பு கோஷங்களுக்கு மத்தியில் மேலும் இறுக்கமடையலாம். ஆட்சி அதிகாரமும் பெரும்பான்மையையும் அவர்களிடத்தில் இருக்கின்றது என்பதை நாம் மறக்கவில்லை.

தமிழர் எதிர்கால அரசியல் நலன் கருதி கடந்த கால அரசியல் குரோதங்கள், போட்டியை அரசியல், காட்டிக் கொடுப்புக்கள், சலுகை அரசியல் என்பவருக்கு இடம் கொடுக்காது பெரும் தேசிய வாதத்தினை தேசமாக மக்களோடு சேர்ந்து எதிர் கொள்ள கொடுக்கவும் பேச்சு வார்த்தை தொய்வும் தோல்வியையும் சந்திக்காது முன்னோக்கி நகர்ந்து செல்லும் பொறுப்பும் கடப்பாடும் தமிழ் தேச உணர்வாளர்களுக்கு அவசியம்.

மாவீரர்கள் சிந்திய குருதி எம் மண்ணிலிருந்து இன்னும் காயவில்லை. அவர்களின் எழுச்சி குரலும் தாகமும் இன்னும் அடங்கவில்லை. முள்ளிவாய்க்கால் அவலக் குரலும் தினந்தினம் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. நாம் ஏற்றிய தீபங்கள் எம் மனசாட்சியின் தீபங்களாக இருக்கட்டும். அது கூட்டு அரசியலில் சுடராக வியாபிக்கட்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கற்கோவளம் உணவு பிரச்சினை கைதான இருவருக்கும் பிணை

யாழ்ப்பாணம்வடமராட்சிவடக்குபருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் கிராமசேவகர் உணவு நிவாரணம் வழங்கியபோது பொதுமக்களுடன் ஏற்பட்ட தகராறு தொடர்பாக பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களுக்கும் புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது.

கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டு திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் புதன்கிழமை வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் புதன்கிழமை மீண்டும் இந்த வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்குக்கு சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றுக்கு முன்வைத்த விவாதத்தின் அடிப்படையில் கைதான இருவருக்கும் பருத்தித்துறை நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த நவம்பர் 30ஆம் திகதி கற்கோவளம் பகுதியில் உணவு நிவாரணம் வழங்கச் சென்ற கிராம சேவகரிடம் பிள்ளைகளுக்காக உணவு கோரிய வேளை முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த கிராமசேவகர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததன் அடிப்படையிலேயே இந்த இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குறிஞ்சிப்பிட்டியில் நீண்ட நாள்களின்பின் திருத்தியமைக்கப்பட்ட வீதி விளக்குகள்

(சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி பகுதியில் கூடுதலான வீதி லாம்புகள் நீண்ட நாள்களாக பழுதடைந்து திருத்தப்படாமல் காணப்பட்டன.

இது விடயமாக கற்பிட்டி பிரதேச சபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அவைகளுக்கான வாகன வசதிகளும் மின் குமிழ்களுக்கான நிதி ஒதுக்கீடுகளும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் குறிஞ்சிப்பிட்டி சமூக ஆர்வலரும் வளர்ந்து வரும் அரசியல் வாதியுமான ஏ.ஆர் ஜெஸ்பர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக குறிஞ்சிப்பிட்டி பகுதியில் பழுதடைந்த வீதி வினக்குகளை மாற்றியமைப்பதற்காக கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மூலம் 15 புதிய மின் குமிழ்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் தனது சொந்த வாகனத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச சபையின் பொறியியலாளரின் உதவியுடன் குறிஞ்சிப்பிட்டி பகுதியின் பழுதடைந்த மின் குமிழ்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன என ஏ.ஆர். ஜெஸ்பர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

### தொடர்ந்து நீர் விநியோகம் இல்லை

# வீதியில் இறங்கிப் போராட காரைதீவு மக்கள் தயார்

## நாடாளுமன்றத்தில் எச்சரித்தார் க.கோடீஸ்வரன் எம்.பி.

காரைதீவு மக்களுக்கு நீர் விநியோகம் கடந்த 10 நாட்களாக வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் உடனடியாக நீர் விநியோகம் வழங்கப்படவில்லை ஆனால் வீதியில் இறங்கி போராடுவதற்கு மக்கள் தயாராகிவருகிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றும்போது -

அம்பாறை மாவட்டத்தில் அதிக அளவு மழை வீழ்ச்சியின் காரணமாக கரையோர பிரதேசங்கள் கூடுதலாக பாதிக்கப்பட்டது. அதில் தற்பொழுது வரை 10 நாள்களாக எந்தவித நீர் விநியோக மின்றி காரைதீவு மக்கள் மிகவும் படுமோசமான இன்னலுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இன்று காரைதீவு பிரதேசத்துக்கான நீர் வழங்கல் என்பது முற்றாக தடைப்பட்டு அப்பிரதேச மக்கள் அபாயகரமான சூழ்நிலையிலே கஷ்டப்படுகிறார்கள். நீர் விநியோக சபைக்கு சொந்தமான பிரதான நீர்க் குழாய் உடைந்ததன் காரணமாக இந்த நீர் வெட்டு இடம்பெற்றிருக்கிறது.



அதனை திருத்துகின்ற செயற்பாடானது மிகவும் மந்த கதியில் நடைபெறுகிறது. இது விடயத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் அசமந்த போக்கிலே இருக்கிறார்கள். காரைதீவு மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் அற்ற நிலையில் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு உரிய அமைச்சர், அதிகாரிகள் உடனடியாக இதற்கு தீர்வு காண வேண்டும். இந்த இழுபறி நிலை தொடருமானால் காரைதீவு மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள் என்ற செய்தியையும் இந்த உயரிய சபையிலே கூறி வைக்க விரும்புகிறேன்.

அதேபோல் அம்பாறை மாவட்டத்தில் கூடுதலான நெற்செய்கை நிலங்கள் காணப்படுகின்ற நிலையில், விசேடமாக ஆலையடிவேம்பு, திருக்கோயில், நாவிதன்வெளி மற்றும் காரைதீவு போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கூடுதலானவயல்நிலங்கள்சேதம்அடைந்திருக்கின்றன. இந்த விவசாயிகளுக்கு மானிய உதவித் திட்டத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று இந்த சபையின் ஊடாக கேட்டுக் கொள்கிறேன்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் காணப்படுகின்ற முறையற்ற கால்வாயால் தண்ணீர் வழிந்து ஓடுவது குறைவாக காணப்படுவதால் முறையான கால்வாய் அமைக்கும்திட்டத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. ஏற்பட்ட மழையால் கூடுதலாக பாதிக்கப்பட்ட பிரதேசமாக அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்பு பிரதேசமே காணப்படுகின்றது. எனவே அதற்கான தீர்வுகளை நீங்கள் உடனடியாக செய்ய வேண்டும். விசேடமாக ஜனாதிபதி அவர்கள் மிகச் சிறப்பாக, திறமையாக செயற்படக் கூடியவர்.

ஜனாதிபதி மற்றும் விடயத்திற்கு பொறுப்பான உரிய அமைச்சர் அதிகாரிகளிடத்தில் பணிப்புரை வழங்கவில்லை என்பதுதான் இந்த இடத்தில் நாம் முக்கியமாக கூறிக்கொள்ள விரும்புகின்ற விடயமாகும். எனவே, இப் பிரச்சினை தீர்ப்பதற்கு பிரதம அமைச்சர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஆகியோர் உடனடியாக நடவடிக்கை எடுத்து குறித்து மக்களுக்கு தீர்வை உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் கூறினார்.

## செஸ்டோ அமைப்பால் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

(அமீர்)

அண்மையில் இடம்பெற்ற சீரற்ற காலநிலை மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் சீசெட்டோ கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பு

செஸ்டோ எனப்படும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் கல்முனை கிரீன் பீல்ட் பிரதேசத்தில் அமைந்துள்ள றோயல் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு செஸ்டோவின் தலைவர் ஏ.எம்.எம்.றிபாஸ் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.



வெள்ள அனர்த்தத்தால் தங்களது கற்றல் உபகரணங்களை இழந்துள்ள மாணவர்களின் அடிப்படை தேவைகளுக்கு வசதி செய்யும் வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை வளங்கும் நோக்கில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் றோயல் வித்தியாலய அதிபர் எம்.எச்.எம். அன்சார் மற்றும் செஸ்டோ நிறைவேற்று குழுவின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

செஸ்டோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் நாட்டில் ஏற்பட்ட ஒவ்வொரு அனர்த்த சூழலிலும் தன்னார்வமாக அதன் அங்கத்தினர்கள் ஒன்றிணைந்து பரந்துபட்ட நோக்கத்துடன் களப்பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இடர் பயன்பாட்டு மேலங்கி மருதமுனைக்கு கிடைத்தது

(ஷினாஸ்)



தேசிய சமூக நீதிக்கான கட்சியால் வெள்ள அனர்த்தத்தின் போது, உயிர் ஆபத்துக்களை தவிர்க்கும் பாதுகாப்பு மேலங்கிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு புதன்கிழமை மருதமுனையில் இடம்பெற்றது.

அண்மையில் காரைதீவு மாவடிபள்ளி பாலத்தில் வெள்ளநீரில் உழவுஇயந்திரம் கவிழ்ந்து எட்டு பேர் உயிரிழந்த சம்பவம், அனர்த்த முன்னெச்சரிக்கைகளுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதை மீண்டும் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளது. இவ்வாறான அனர்த்தங்களைத் தவிர்க்கும் முகமாக

காரைதீவு பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ நிவாரண சேவைகள் பிரிவுக்கு இந்த பாதுகாப்பு மேலங்கிகள் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய சமூக நீதிக்கான கட்சியின் தேசிய அமைப்பாளர் அர்க்கம் முனீர், கட்சியின் தேசிய தலைமைத்துவ சபை உறுப்பினர் இர்பான் பண்னா, கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னாள் அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் றாஸிக் நபாயிஸ் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸ் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர்.



அனர்த்தங்கள் இடம்பெறும் பிரதேசங்களில் பொதுமக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பிரதேச செயலகங்கள் துரிதப்படுத்த வேண்டும். அனர்த்த முகாமைத்துவ பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கும் பட்சத்தில் உயிர் இழப்புகளைத் தவிர்க்க முடியும் என்றும் தேசிய சமூக நீதிக்கான கட்சியின் தேசிய அமைப்பாளர் அர்க்கம் முனீர் தெரிவித்தார்.

கிட்டங்கி -மாவடிப்பள்ளி அனர்த்தத்தின் போது, குறித்த உழவு இயந்திரத்தில் பயணித்து உயிர் தப்பி வந்த ஆர்.எம். ரீபா இந்த மேலங்கிகளை உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் தொழுநோயா ளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இயக்கத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நிருபா பல்லேவத்த தெரிவித் துள்ளார்.

சுகாதார சேவைகள் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அதன்படி, நாட்டில் இவ்வருடத்தின் முதல் 10 மாதங்களில் 1,084 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான தொழுநோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 115 ஆகும்.

அத்துடன், கம்பஹா மாவட்டத்திலிருந்து 113 தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாட்டில்கடந்த2023ஆம்ஆண்டில்1,500தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

# ரயில் கடவையை கடக்க முயன்ற காரின் மீது மோதிய தொடருந்து

## நால்வர் படுகாயம்



ரயில் கடவையை கடக்க முயற்ற கார் ஒன்றின் மீது ரயில் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த விபத்தில் 4 பேர் படுகாயமடைந்து காலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காலி சுதர்மாராம விகாரைக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நால்வரில் இரண்டு பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய இராணுவத்தில் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டவர்களை மீட்டுத் தருக

## ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோருக்கு மனு



வலுக்கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை உடன் மீட்டுத்தருமாறு, பாதிக்கப்பட்டவர்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு மகஜர் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளபோதும் ரஷ்ய தூதரகம் அவர்களின் மகஜரை பெற்றுக்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படையில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டவர்களின் உறவினர்கள் கையளித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்காக எமது உறவினர்கள் முகவர் ஊடாக பணம் செலுத்தி கடந்த மாதம் பயணமாகியிருந்தனர். அவர்களைகொழும்பு கட்டுநாயக்கவிலிருந்து ரஷ்யாவுக்கு கொண்டு செல்வதாகவும் பின்னர் அங்கிருந்து ஐரோப்பியாவுக்கு அழைத்துச் செல்வதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, அவர்களுக்கு 60 லட்சம் முதல் 70 லட்சம் வரையிலான பணம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் எமது உறவினர்கள் ரஷ்ய விமான நிலையத்தில் இருந்து ரஷ்யாவுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் அவர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

15 நாள்கள் பயிற்சியின் பின்னர் அவர்கள் உக்ரேனுக்கு எதிரான போருக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் ஐரோப்பாவிற்கு அழைத்துச் செல்வதாக பணம்பெற்றுக்கொண்ட முகவர்களுடன் தொடர்புகளைக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தற்போதும் போர் உக்கிரமாக நடைபெற்று வருவதால் அவர்களின் உயிர்களைப் பாதுகாத்து எமது உறவுகளை பத்திரமாக மீட்டுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

மிதுர்ஷன், பகிரதன், பாலச்சந்திரன்,பிரதாப், சிவாஸ் ஆகியோரே ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




காலைக்கதிர் Kalaikkathir

# அனர்த்த நிலைமைகள் தொடர்பான பிரேரணையை முன்வைத்தார் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், அனர்த்த நிலைமைகள் தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

கடந்த சில நாள்களுக்கு முன்னர், வங்கக் கடலில் ஏற்பட்ட 'பெங்கள்' சூறாவளி காரணமாக, நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட சுமார் 24 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டன. இந்த இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை நான்கு லட்சத்து 75 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இது சமீபகால வரலாற்றில் பதிவான மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் ஆகும்.



இதன் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் நெற்செய்கை உட்பட உணவுப் பயிர்கள் மற்றும் பாரிய விவசாய நிலங்களும் சேதமாகியுள்ளன. விவசாயத்தை தங்களின் வாழ்வாதாரமாகக்கொண்ட விவசாயிகள், இதன் காரணமாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மோசமான இந்த காலநிலை சம்பந்தமாக, 17 உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று, நிந்தவூர், மதரஸாவைச் சேர்ந்த 11 மாணவர்கள் பயணித்த உழவு இயந்திரம், காரைதீவு - மாவடிப்பள்ளி பாலத்திற்கருகில் விபத்துக்குள்ளானதில், எட்டு உயிர்கள் பலியாகின.

எனவே, வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சொத்துச் சேதம், உயிர்ச்சேதம் ஆகியவற்றுக்கு அரசாங்கத்தால் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன், இந்தப் பிரேரணையை முன்வைத்து, சபை ஒத்திவைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைக்கின்றேன்.

சபைக்கு தலைமை தாங்குகின்ற சபாநாயகர் அவர்களே,

இவ்வாறானதொரு அனர்த்தம் இடம்பெறவுள்ளதாக, வளிமண்டலவியல் திணைக்களம் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், சில அரச அதிகாரிகள் சிறந்த முறையில் செயற்பட்டதால், குறிப்பிட்ட மாவட்டங்கள் அனர்த்தங்கள் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால், பாரிய சேதங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை, இந்த உயர் சபையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அரசாங்கம் வந்ததன் பிற்பாடு, ஏற்பட்ட மிகப்பெரிய அனர்த்தமாக இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

அந்தவகையில், அம்பாறை மாவட்டத்தில், நிந்தவூர் மதரஸா மாணவர்களின் இழப்பு தொடர்பில், குறிப்பிட்டாக வேண்டும். குறித்த மதரஸாவிற்கு நான் நேரில் விஜயம் சென்று பார்வையிட்டேன். மதரஸாவில் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்பட்டதால்தான், மாணவர்களை வீடுகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவர்கள் பாதுகாப்பாக பஸ்ஸில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தார்கள். எனினும், பஸ் பயணிக்க முடியாத காரைதீவு - மாவடிப்பள்ளி பாலத்தின் ஊடாக செல்வதற்கு, குறித்த மாணவர்கள் உழவு இயந்திரத்தில் அனுப்பப்பட்டபோது, பொலிஸார் பார்த்துக்கொண்டு இருந்திருக்கின்றார்கள். இம் மாணவர்கள், அந்தப் பாதையில் பயணிப்பதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர், ஏற்கனவே, ஓர் உழவு இயந்திரத்தில் அந்தப் பாலத்தின் ஊடாக பயணித்தவர்கள், கீழே வீழ்ந்து பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறான சம்பவங்கள், அந்த இடத்தில் இடம்பெற்றுள்ளன என்பது தொடர்பில், பின்னர் சென்ற குறித்த மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை. இந்த விடயங்களை பொலிஸார் அறிந்திருந்தும், அதனை தெரியப்படுத்தாமல் மேற்படி பாதையால் பயணிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்த விடயத்தில், பொலிஸாரும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகளும் சிறுபிள்ளைத்தனமாக செயற்பட்டிருக்கின்றார்கள். மேலும், இந்த சம்பவம் இடம்பெற்றபோது, அங்கிருந்தவர்கள் பிள்ளைகளை காப்பாற்றித் தருமாறு கூக்குரலிட்டுள்ள போதும், அங்கு நின்றிருந்த பொலிஸார், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்து, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துள்ளனர்.

அதுமட்டுமின்றி, இவ்வாறானதொரு அனர்த்தம் நிகழும் பட்சத்தில், அவர்களைக் காப்பாற்ற வேண்டிய அவசர நடவடிக்கைகளை முன்னெடுக்காமல், அங்கு வருகை தந்த பொலிஸார், பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு அளிக்குமாறு கூறியிருக்கின்றார்கள். பொலிஸ் நிலையத்திற்குச் சென்றும் கூட, ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக முறைப்பாடு செய்வதற்கு காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், மறுதினம் குறித்த மதரஸா அதிபரையும் ஒரு சிலரையும் சிறைக்கு அனுப்பும் வேலையை செய்திருக்கின்றார்கள்.

மரணம் என்பது இறைவனின் நாட்டப்படி நிகழ்வது. என்றாலும், இவ்வாறான ஆபத்துக்களை தடுக்க வேண்டிய பொறுப்பு, அரசாங்கத்துக்கு, அதிகாரிகளுக்கு, மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நம் அனைவருக்கும் இருக்கின்றது.

எனவே, இனிமேலும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கான, முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அத்துடன், இந்த சம்பவத்திற்குப் பின்னால் உள்ள அதிகாரிகள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அதேபோன்று, இந்த அனர்த்தத்தால், நாடு முழுவதிலும் 17 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். அவர்களின் உறவினர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றோம்.

மேலும், நான் பிரதிநிதித்துவப்படுத்தும் மன்னார் மாவட்டம், இம்முறை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 19 ஆயிரத்து 811 குடும்பங்களை சேர்ந்த, 68,334 பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 30க இற்கும் மேற்பட்ட சிறிய குளங்கள் சேதமடைந்துள்ளன. 7500 ஹெக்டேயர் வேளாண்மை செய்த காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. 91 கிலோமீற்றர் சிறிய பாதைகள் சேதமடைந்துள்ளன. நூற்றுக்கணக்கான கால்நடைகள் அழிந்துபோயின.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமானத்துடன் அவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, வவுனியா மாவட்டத்தில், 161 சிறு குளங்கள் சேதமடைந்துள்ளன. 6000 ஹெட்டேயர் விவசாய நிலப்பரப்பு சேதமாகியுள்ளன. இதேவேளை, வவுனியா தெற்கு பிரதேசத்தில் ஒரு மரணம் பதிவாகி இருக்கின்றது.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் 3099 குடும்பங்களைச் சேர்ந்த 9398 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 60 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பல சிறிய மதகுகள், பாதைகள், விவசாய நிலங்கள், கால்நடைகள் என்பனவும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில், 4249 குடும்பங்களைச் சேர்ந்த 12654 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பகுதி அளவில் 89 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் 23561 குடும்பங்களைச் சேர்ந்த 73532 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 129 வீடுகள் பகுதி அளவிலும், ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில், 5000 இற்கு மேற்பட்ட ஹெட்டேயர் விவசாய காணிகள் சேதமாகியுள்ளன. மீனவர்கள் பல நாள்களாக தொழிலுக்குச் செல்ல முடியாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்கு எந்த ஒரு நிவாரணமும் வழங்கப்படாமல் கஷ்டப்படுகின்றார்கள். மேலும், அந்த மாவட்டத்தில் உள்ள குளங்கள் தற்பொழுது சேதமாகியுள்ளதால், விசேட நிதியை ஒதுக்கீடு செய்து, குளங்களை சீரமைப்பதன் மூலமே, மாவட்டத்தின் விவசாய நிலங்களைக் காப்பாற்ற முடியும்.

அதேபோன்று, குறிப்பாக, புத்தளம் மாவட்டத்தில், புத்தளம் நகரம் சிறிய வெள்ளத்தைக் கூட தாக்குப்பிடிக்க முடியாத நிலையிலேயே காணப்படுகின்றது. எனினும், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, அரச இயந்திரங்கள் இயங்குவதை விட ஜம்இய்யத்துல் உலமா, டீச்சிங் ஆப் இஸ்லாம் மற்றும் அபுதாபி, குவைட், இந்தியா போன்ற நாடுகளின் உதவிகள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் அவசர அவசரமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், மெதடிஸ்த தேவாலயங்கள் மற்றும் இன்னோரன்ன பல அமைப்புக்களும் உதவிகளைச் செய்தார்கள். அவர்கள் அனைவருக்கும் மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதேவேளை, கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்ஹவுடன் இணைந்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் விஷேட கூட்டங்களை நடத்தினோம். அந்தப் பிரதேசங்களில், அவசர தேவைகளுக்காக நிதிக் கோரிக்கைகளை விடுத்தபோது, உடனடியாக நிதியினை வழங்கினார்கள். அதற்கு எமது நன்றிகளையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, அக்குரணை பிரதேசத்தை பொறுத்தவரையில், ஒவ்வொரு வருடமும் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால், பாரியளவில் நஷ்டத்தை எதிர்நோக்கும் ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது. எனவே, பெரும்பான்மை அரசாங்கமாக இருக்கின்ற நீங்கள், இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான திட்டம் ஒன்றை வகுத்து, அதனை செயற்படுத்துங்கள். அதற்குத் தேவையான நிதிகளை பெற்றுக்கொள்வதில் ஏதேனும் உதவிகள் தேவையாக இருப்பின், மத்திய கிழக்கு நாடுகளின் உதவிகளைப் பெற்றுத்தருவதற்கு நாங்களும் தயாராக இருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டில், வெள்ளப்பாதிப்பு அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. மலைநாட்டுப் பகுதிகளில் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன.

எனவே, இனிமேலும் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். உடனடியாக எம்மால் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியாவிட்டாலும், கட்டங்கட்டமாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து, வெள்ளப் பாதிப்பு, உயிர்ச் சேதங்கள் வராமல் தடுப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்று கூறி எனது பிரேரணையை முன்வைக்கின்றேன். - என்று கூறினார்.

# பொதுமக்களின் வாக்குகளால் கணிசமான சதவீத பெண்கள் நாடாளுமன்றுக்குத் தெரிவானது சிறப்பு

## பிரதமர் ஹருணி பெருமிதம்

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் புதன்கிழமை முதல் தடவையாக நாடாளுமன்றத்தில் கூடியது. இதில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமாலி வீரசேகர, நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் ஒன்றியத்தின் செயலாளருமான குஷானி ரோஹனதீர உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



இதில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் புதிய தலைவராக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார். அவருடைய பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அனுஷ்கா திலகரத்ன வழிமொழிந்தார்.

அத்துடன், பெண் நாடாளுன்ற ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களாக இருவர் தெரிவுசெய்யப்பட்டனர். இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்திரானி பண்டார கிரிஎல்லே பிரதி இணைத்தலைவராக தெரிவுசெய்யப்பட்டதுடன், இவருடைய பெயரை ரோஹினி விஜேரத்ன முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் துஷாரி ஜயசிங்க வழிமொழிந்தார்.



மேலும், மற்றுமொரு பிரதி இணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க தெரிவுசெய்யப்பட்டதுடன், அவருடைய பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் தீப்தி வாசலகே வழிமொழிந்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய குறிப்பிடுகையில் -

பொதுமக்களின் வாக்குகளால் குறிப்பிடத்தக்க வீதமான பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டிருப்பது சிறந்த வெற்றியாகும். - என்றார்.

எனவே, அரசியல் வேறுபாடுகள் இன்றி பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் செயற்பட வேண்டியது அவசியம் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்து பெண்களுக்கும் பாதுகாப்பான நாட்டை உருவாக்குவது ஒன்றியத்தின் நோக்கம் என இங்கு கருத்துத் தெரிவித்த ஒன்றியத்தின் தலைவர் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

அத்துடன், ஒன்றியத்தால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க இரு துணைத் தலைவர்கள் தலைமையில் உபகுழுவொன்று அமைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்ன அவர்களின் பரிந்துரைக்கு அமைய பாலின அடிப்படையில் இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிரான தினத்தை எதிர்வரும் 06ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹினி விஜேரத்ன, சமன்லி குணசிங்க, சமிந்திரானி பண்டார கிரிஎல்லே, தீப்தி வாசலகே, துஷாரி ஜயசிங்க, ஒஷானி உமங்கா, கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன, கிருஷ்ணன் கலைச்செல்வி, லக்மாலி ஹேமச்சந்திர, கீதா ஹேரத், ஹிருனி விஜயசிங்க, அனுஷ்கா திலகரத்ன, சாகரிக்கா அதாவுத, எம்.ஏ.சி.எஸ்.சதுரி கங்கானி, நிலூஷா லக்மாலி கமகே, ஏ.எம்.எம்.எம். ரத்வத்தை, நிலாந்தி கொட்டஹச்சி, ஹசாரா லியனகே, அம்பிகா சாமிவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2024இல் வெளியிடப்பெற்றது